**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை - 2023**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்களலாக நிதிக் கூற்றுக்களுக்கான உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றது.
சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வின் நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிகையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிலையத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இண்ங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதி கூற்றுக்கள்**

**1.5.1 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொள்கை சபையின் முன்னாள் தலைவரின் பதவிக்காலம் 2018 நவம்பர் 07 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் 2018 நவம்பர் 07 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான இரண்டு மாதங்களுக்கு அண்மித்த காலமாக ரூபா 197,600 தொகை சம்பளங்களும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தும் அப்பணத்தை மீண்டும் அறவீடு செய்வறத்கு அல்லது கிடைக்க வேண்டிய கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ளவாறு கணக்கு நடவடிக்கைகளுக்காக மேலதிக அறிவுறுத்லத்களை வேண்டி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | மிகைக் கொடுப்பனவு கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் கொடுப்பனவுகளை சிபாரிசு செய்த, அங்கீகரித்த மற்றும் கொடுப்பனவு செய்த தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

**1.6 கிடைக்க வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கமத்தொழில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 03 ஆராய்ச்சி நிறுவனங்களக்கு மற்றும் 03 பல்கலைக் கழகங்களுக்கு வழங்கிய பணத்திலிருந்து செலவு செய்யப்படாது மிகுதியாக உள்ள ரூபா 659,131 இனை சபைக்கு பெற்றுக்கொள்ளாது 2006 ஆம் ஆண்டிலிருந்து நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | ருகுணு பல்கலைக்கழகம் ரூபா 200,000 விலைப்பட்டியலினை சபைக்கு அனுப்பிவைத்துள்ளதனால் அப்பணம் ரூபா 459,131 வரை குறைவடைந்துள்ளது. நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை குறிப்பிட்டு கடிதமும் ஞாபகப்படுத்தல் கடிதமும் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மேலும் இது சம்பந்தமான சிபாரிசுகளுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு ஒரு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் நிருவாக சபைக்கு அனுப்பிவைத்து இந்த மீதியை | உரிய நிலுவைப் பணத்தை அறவிட்டு திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை அதிகாரச் சட்டம்** | | | |
| (அ) 10 ஆம் பிரிவு | கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கையை தயாரிப்பதற்காகவும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொள்வது கொள்கைச் சபையின் செயற்பாடாக இருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சபையின் செயற்பாடான அரசாங்கத்திற்கும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குமிடையே கருத்துக்களை பரிமாற்றம் செய்யும் ஒரு வழியாக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. அதன் போது ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் கொள்கை தயாரிப்போர்களுக்குமிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆராய்ச்சி முன்னுரிமைகளைத் தயாரிக்கும் போது அரசாங்கத்தின் தனியார் ஆராய்ச்சி நிறுவனங்களை தொடர்புகொண்டு அரசாங்கத்தின் கொள்கையை தயாரித்தல் சம்பந்தமான கருத்துக்களை பரிமாற்றம் செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுததல் வேண்டும். |
| (ஆ) 10(ஏ) ஆம் உபபிரிவு | நிறுவனங்களுக்கிடை யிலான கமத்தொழில் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் நிதி வழங்குதல் சபையின் செயற்பாடாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது புதிய செயற்திட்டங்களை அடையாளங்கண்டு அதற்காக நிதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது 03 புதிய செயற்திட்டங்களுக்காக பணம் வழங்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் புதிய ஆராய்ச்சி செயற்திட்டங்களை அடையாளங்கண்டு அவை நிறைவேற்றப்படுத ல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 11(ஈ) ஆம் உபபிரிவு | கொள்கை சபை தீர்மானிக்கின்ற பிணையங்களில் பணத்தை முதலீடு செய்யும் அதிகாரம் சபைக்குரியதாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் மிகையாக காணப்பட்ட ரூபா 14,786,815 நடைமுறைக் கணக்கு மற்றும் ரூபா 16,989,418 சேமிப்பு கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பிணையங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மிகைப் பணம் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் இலக்கம் 380(2) மற்றும் 446 | கொள்கை சபையினால் இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்க கிளையில் பேணப்பட்டு வருகின்ற 02 சேமிப்பு கணக்குகளை ஆரம்பிப்பதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்குரிய ஆவணங்களை தேடிக்கண்டுபிடிப்பது சிக்கலானதாக இருந்ததுடன் அந்த ஆவணங்களை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு அல்லது அவ்வாறு இல்லாதிருக்குமாயின் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வங்கி கணக்குகளை ஆரம்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,919,221 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 13,108,799 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 33,028,020 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியம் ரூபா 72,926,081 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கமத்தொழில் ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் முறைமைக்காக (INFORM) 30 ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து தகவல்களைக் கோருவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது 24 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் தகவல்கள் கோரப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சி தொடர்பாக சேகரிக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கி வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய அறிக்கைப் புத்தகங்கள் 2019 ஆண்டின் பின்னர் வழங்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் 27 நிறுவனங்களிடமிருந்து தற்பொழுது தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மிகுதியான 03 நிறுவனங்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஞாபகப்படுத்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு தொடர்பான புத்தகங்கள் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளதுடன் 2020 | வருடாந்தம் வழங்கப்பட வேணடிய அறிக்கைப் புத்தகத்தினை வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கிய அறிக்கைப் புத்தகங்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து கொவிட் தோற்றுநோய் நிலைமை வரையான காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பிற்காக வெளிநாடு சென்ற தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் 25 ஆராய்ச்சியாளர்கள் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக கொள்கைச் சபைக்குத் தெரிவிக்காது நாட்டிற்குள் வந்திருந்ததுடன் நாட்டிற்குள் இருந்த காலப்பகுதிக்காக ரூபா 21,076,932 உதவிப்படிகள் செலுத்துதல், 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது அறவிடப்பட்ட ரூபா 11,026,926 பணம் பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைக்காமை மற்றும் இன்னும் அறவிட வேண்டிய ரூபா 8,490,164 தொகை அறவிடப்படாது காணப்படல் ஆகிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | நிறுவனத்திற்கு தெரிவிக்காது நாட்டிற்குள் வருகை தந்திருந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த உதவிப் படிகள் (Stipend) 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை அறவிட்டு ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. இந்த உதவிப் படியை எதிரீடு செய்வதற்குரிய நிதி ஏற்பாடு பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை. செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மிகுதித் தொகைக்குரிய நிதி எற்பாடு மாத்திரம் பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. | நாட்டிற்குள் வருகை தந்திருந்த காலப்பகுதிக்குரிய படியை அறிவிட்டு திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| (இ) | விவசாய அமைச்சில் காணப்படுகின்ற ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகள் சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 இலிருந்து 2020 வரையான காலம் தொடர்பாக பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டு காணப்பட்ட 03 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை உரிய காலத்தில் பெற்று மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கமத்தொழில் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நிதி வழங்குகின்ற தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி திட்ட (NARP) செயற்திட்டத்தின் 2015 இலிருந்து 2020 வரையான காலம் தொடர்பான 04 இறுதி ஆராய்ச்சி அறிக்கைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஞாபகப்படுத்தல்களை முன்னிட்டு ஒரு இறுதி அறிக்கை 2023 யூலை 05 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் தற்பொழுது 03 இறுதி அறிக்கைகள் கிடைக்க வேண்டியுள்ளன. | ஆராய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கைகளை உரிய காலத்தில் பெற்று மீளாய்வு செய்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபையின் மூலம் கடந்த ஆண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தேசிய பரிசளிப்பு விழாவிற்காக (SLCARP, Natoinal Awards) விண்ணப்பங்களைக் கோரி, பதிப்பீட்டுக் குழுவினை நியமித்து மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அப்பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபை 2021 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தேசிய பரிசளிப்பு விழாவிற்காக விண்ணப்பங்களைக் கோரி மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தும் திறைசேரியினால் மூலதன நிதி வழங்குதல் 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் காலாண்டில் இடம்பெற்றிருந்தமை மற்றும் அக்காலப் பகுதியில் விவசாய அமைச்சர் வேலைப் பழுவிற்கு உட்பட்டிருந்தமையின் அடிப்படையில் காலத்தை | பரிசளிப்பு விழாவினை திட்டமிட்டதன் பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒதுக்கிக்கொள்வது சிக்கலானதாக இருந்ததன் காரணமாக இவ்விழாவினை திட்டமிட்டவாறு நடாத்துவதற்கு முடியாதிருந்தது. | |

(உ) தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் (NARP-NUS) நிதியினை வழங்கி அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் மேற்பரப்பு மண்ணில் ஏற்படக்கூடிய நச்சுத் தன்மையான துகள்கள் ஒருமுனைப்படுதலும் பரவுதலும் நெற்பயிர்ச்செய்கை சம்பந்தமாக "PHYTO" ஒருமுனைப்படுதல் எவ்வளவு என்பது தொடர்பாக பரீட்சிப்பதற்கான "Status of Polentially toxic trace elements in surface soils in Anuradhapura and Polonnaruwa districts, Baseline concentrations, Spatial distribution and Phyto availabitity fior rice" செயற்திட்ட பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

| | | |
|---|---|---|
| (i) விவசாய அமைச்சு, கொள்கை சபை மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கிடையே 2019 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் கையொப்பமிட்டு 03 ஆண்டுகள் காலத்திற்கு அல்லது பரஸ்பர இணக்கப்பாட்டில் செயற்திட்டத்தின் காலத்தை நீடித்துக் கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் சபையினால் 05 ஆண்டுகள் முழுவதும் கொடுப்பனவுகளை மேற்கொண்டு செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது பேராதனை பல்கலைக்கழகத்துடன் அச்செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் நிதிப்பிரச்சினைகளின் காரணமாக இச்செயற்திட்டம் மிகவும் சிரமத்துடன் பேணப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்திற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே நிதி வழங்கப்பட்டிருந்தன. அக்காரணத்தினால் இச்செயற்திட்டத்திற்காக 04 ஆண்டுகள் முழுவதும் நிதி வழங்க வேண்டி ஏற்பட்டது. இக்காரணத்தால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நிதி வழங்குவதற்கு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் 2022 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி உதவிப் படிகளைச் செலுத்துவதற்காகவே ரூபா 240,000,000 நிதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இச்செயற்திட்டம் 04 ஆண்டுகள் வரை பேணப்பட்டுள்ளது. | குறிக்கோளுடன் செயற்திட்ட காலத்தை நீடித்தல் வேண்டும். |
| (ii) 2021 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 5,760,000 பணத்தில் ரூபா 4,587,190 பணம் செயற்திட்ட செயற்பாடுகளுக்காகப் | செயற்திட்டம் தொடர்பான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பணம் உரிய | செயற்திட்ட காலத்தையும் நிதியையும் முறைப்படியாக |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படாது 05 மாத காலம் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | பல்கலைக்கழகங்களுக்கு ஆண்டின் மத்திய பகுதியில் வழங்கப்பட்டது. பெறுகைச் செயற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகளானது பல்கலைக்கழகத்திற்கு நிதியை வழங்கியதன் பின்னரே ஆரம்பிக்கப்பட்டன. பெறுகை நடைமுறைகளுக்காக எடுக்கப்பட்ட காலம் 05 மாதங்களை மிகைத்திருந்தது. எனவே 2021 ஆம் ஆண்டில் உரிய உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாதிருந்ததுடன் அந்த நிதியை மீண்டும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சிற்கு அனுப்பிவைக்க வேண்டி ஏற்பட்டது. உரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு 2022 ஆம் ஆண்டில் நிதி வழங்கியதன் பின்னர் உரிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொள்கைச் சபை அமைந்துள்ள கட்டிடத்திற்கு ஒரு பகுதியைச் சேர்த்துக்கொள்வதற்கான ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 12,300,000 தொகைக்கு கட்டிட திணைக்களத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தும் வேலையைப் பூர்த்திசெய்ய வேண்டிய திகதியான 2020 ஏப்ரல் 30 ஆந் திகதியில் வேலை முடிவடைந்திருக்கவில்லை. 2022 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரை சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதி ரூபா 5,516,590 ஆக இருந்த போதிலும் அவர்களுக்கு ரூபா 12,217,303 பணம் செலுத்தப்பட்டிருந்ததனால் சான்றுபடுத்தப்படாத வேலைகளுக்காக ரூபா 6,700,713 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தும் திட்டத்திற்கு இணங்க இச்செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்ய வேண்டுமாயின் ரூபா 11,088,000 பணம் மேலதிகமாக செலவு செய்ய வேண்டும் என அண்மையில் மேற்கொண்ட பொறியியல் மதிப்பீட்டின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு இடம்பெறவில்லையாயின் இதுவரை செலவு செய்த பணத்திலிருந்து | இக்கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் கட்டிட திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டிலும் சபைக்கு பணம் கிடைக்காமையினைப் போல Covid 19 தொற்றுநோய் மற்றும் நாட்டில் காணப்பட்ட தீவிர பொருளாதார சிக்கலின் காரணமாக இந்த நிர்மாண நடவடிக்கையை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. கட்டிடத்தின் மிகுதிவேலையை பூர்த்திசெய்வதற்காக ரூபா 11,088,000 மதிப்பீடு கட்டிடத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் வேலை பூர்த்திசெய்யப்படாமையின் காரணமாக வாயு சீராக்கி இயந்திரம் பொருத்தப்படாத போதிலும் புதிய நீர்த்தாங்கியினூடாக நிறுவனத்திற்கு நிர் வழங்கப்பட்டுள்ளது. | கட்டிடத்தின் வேலையை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உரிய பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் என அவதானிக்கப்பட்டது.

### 3.3 வாகன முறைமையை முகாமைத்துவம் செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிதக் கொள்கை சபையின் பெயரில் பேணப்பட்ட வெளிநாட்டு நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட Hillux டபிள் கெப் வாகனம் செயற்திட்டம் பூர்த்திசெய்ததன் பின்னர் கொள்கைச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காததனால் 20 ஆண்டுகள் முழுவதும் அந்த வாகனம் தவறான பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடமிருந்து JW 3904 ஆம் இலக்க கெப் வாகனத்தின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் அந்த வாகனத்தின் தற்போதைய உரிமையாளராக M/S ICRAF (World Agro forest Centre) Sri Lanka ஆக காட்டப்பட்டிருந்ததுடன் தற்போதைய உரிமையாளராக CARP Tree Domestication Project, 114/9, Wijerama Mawatha, Colombo - 07 ஆக காட்டப்பட்டிருந்தது. எனவே JW 3904 ஆம் இலக்க இந்த வாகனத்தை சபைக்கு ஒப்படைக்கும் சட்டரீதியான இயலுமை தொடர்பாக தெளிவுபடுத்திக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இச் செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையின் பிரதி பின்னிணைப்புக்களுடன் அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் பேராசிரியர் டீ.கே.என்.ஜீ புஸ்பகுமார அவர்களினால் 2023-08-23 ஆந் திகதி சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் இந்த கெப் வாகனம் 2023-08-03 ஆந் திகதி ICRAF நிறுவனமும் நீர்ப்பாசனம், சுற்றாடல், வன வளங்கள் பெருந்தோட்ட பயிர்ச் செய்கை மற்றும் விவசாய அமைச்சும் இணைந்து அமுல்ப்டுத்துகின்ற ஒரு செயற்திட்டத்திற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. | வாகனம் சபைக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். |